**கவனிக்க.-** *2009.05.07ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1602 - 2009 මැයි මස 15 වැනි සිකුරාදා - 2009.05.15

*1602 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 568 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 572 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2009, மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மே மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - அனுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆனி மாதம் 12 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு,
2009, சித்திரை மாதம் 17 ஆந் திகதி.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அனுராதபுரம் | மஹவிலாச்சிய | நுவரகம்பலாத விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி மற்றும் மஹவிலாச்சிய பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அனுராதபுரம் |

5-195

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆனி மாதம் 12 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு,
2009, சித்திரை மாதம் 17 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | குளியாப்பிட்டிய மேற்கு | கட்டுகம்பல ஹத்பத்துவ விவாக (கண்டி/பொது)பதிவாளர் பதவி மற்றும் கட்டுகம்பொல கோறளை தெற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |
| குருநாகல் | இப்பாகமுவ | கிரியல ஹத்பத்துவ விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி மற்றும் மடஹபொல கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |
| குருநாகல் | றிதீகம | வேயுடவில்லி ஹத்பத்துவ விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி மற்றும் மடுறே கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |
| குருநாகல் | குருநாகல் | குருநாகல் நகரத்தின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |

5-199

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணபங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆனி மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு,
2009, சித்திரை மாதம் 17 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தும்பனே | தும்பனே மேதசியபற்று பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் தும்பனே பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி |
| கண்டி | பூஜாபிட்டிய | இல. 01-ஹரிஸ்பத்துவ பல்லேகம்பகா தெற்குப் பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் ஹரிஸ்பத்துவ பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி |

5-197

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆனி மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2009, சித்திரை மாதம் 17 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிகம | வெலிகம் கோறளை பிரிவின் கல்பொக்க பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தறை |

5-196

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆனி மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2009, சித்திரை மாதம் 17 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | மல்லவபிட்டிய | வேயுடவில்லி ஹத்பத்து பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |
| குருநாகல் | குருநாகல் | ஹடிரவலன, வேயுடவில்லி ஹத்பத்துவ பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |
| குருநாகல் | கல்கமுவ | வல்பாலுவ, வன்னி ஹத்பத்துவ பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |
| குருநாகல் | எகடுவேவ | வன்னி ஹத்துவப பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |
| குருநாகல் | குருநாகல் | தெலியாகொன்ன பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல் |

5-198

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம்

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை - 2009

**(விவசாயத்தில் டிப்புளோமா கற்கை நெறி - 2010/2012)**

இலங்கை விவசாயக் கல்லூரிகளில், 2010/2012 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகள் மூலம் 2009, ஒகத்து மாதம் பின்வரும் நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளது.

| பரீட்சை நடைபெறும் நகர இல. | பரீட்சை நடைபெறும் நகரம் | பரீட்சை நடைபெறும் நகர இலக்கம் | பரீட்சை நடைபெறும் நகரம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 08 | குருநாகல் |
| 02 | பதுளை | 09 | மாத்தறை |
| 03 | மட்டக்களப்பு | 10 | திருகோணமலை |
| 04 | கொழும்பு | 11 | வவுனியா |
| 05 | காலி | 12 | இரத்தினபுரி |
| 06 | யாழ்ப்பாணம் | 13 | அம்பாந்தோட்டை |
| 07 | கண்டி | | |

குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றுக்குப் போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பில் தெரிவான பரீட்சை நிலையம் அல்லது பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நகரத்திற்கு அண்மையிலுள்ள வேறு ஒரு நிலையம் அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம்/நகரங்களையோ போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலத்தையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**2. இரண்டு வருட டிப்புளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்தல் :**

2.1 ஆண், பெண் இருபாலாரும் விவசாயம் சம்பந்தமான இந்த டிப்புளோமா கற்கை நெறியைப் பின்பற்றலாம். இவ்வெழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் குண்டசாலை, கரபிஞ்ச, அங்குணகொலபெலஸ்ஸ, பெல்வெஹெர, வவுனியா ஆகிய ஐந்து விவசாயக் கல்லூரிகளுக்கும் தகைமையின் அடிப்படையிலும் மாவட்ட அடிப்படையிலும் அனுமதிக்கப்படுவர்.

2.2 இலங்கை விவசாயக் கல்லூரிகளில், கற்பிக்கப்படுகின்ற விவசாய டிப்புளோமா கற்கை நெறி மூன்றாம் நிலைக் கல்வி, தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட முற்றிலும் தொழில்சார் பயிற்சி நெறி ஆகும். பயிற்சியைப் பெற்ற பின்பு

விவசாயத்தைச் சுயதொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது பொருத்தமான தொழிலைத் தேடிக்கொள்ள விரும்பும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருத்தமான வடிவில் இப்பயிற்சிநெறி உருவாக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியின்போது தங்குமிட வசதிகள் வழங்கப்படும். இப்பயிற்சிக் காலத்தின்போது மாணவர்கள், வேறு எந்த ஒரு நிறுவனத்திலும் முழுநேர, பகுதி நேர பயிற்சிகளையோ அல்லது தொழில் வாய்ப்பையோ பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். வேறு எந்த ஒரு நிறுவனத்திலும் எந்த ஒரு மாணவரும் அவ்விதமான பயிற்சியைப் பெறுவதாக அல்லது தொழில் வாய்ப்பைப் பெற்றிருப்பதாக நிரூபிக்கப்பட்டால், அம்மாணவர் விவசாயக் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவார்.

2.3 சிலவேளைகளில் சனி, ஞாயிறு தினங்களிலும் வகுப்பு நடைபெறுவதால், மாணவர்கள் மாதத்தில் ஒரு வார இறுதியில் மாத்திரமே விடுதியை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படுவர். வயல் நிலங்களிலும், மேட்டுநிலங்களிலும் பயிற்சியில் ஈடுபட விருப்பமுடையவராக இருக்க வேண்டும். இப்பயிற்சியின் பின்னர், உலர் வலயத்தின் கிராமப் பகுதிகளிலேயே அதிகமான வேலைவாய்ப்புகள் காணப்படுவதால் இப்பிரதேசத்தில் சேவையாற்ற விருப்பமுடையவராக விண்ணப்பதாரி இருத்தல் வேண்டும். பயிற்சியின் பின்னர் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு விவசாயத் திணைக்களத்தையோ, அரசையோ சார்ந்ததல்ல. சில அரச பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் விவசாய டிப்புளோமா தகைமைக்கு மேலதிகமாக க. பொ. த. (உ.த.) உயிரியற் பிரிவு பாடங்களில் 03 பாடங்களை ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**3. அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி/கணிதம்/விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம் ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றிலும் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். (இதன்படி மொத்தம் நான்கு (04) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்). இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது மூன்றில் (03) ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். இத்தகைமைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு தெரிவின்போது முன்னுரிமை அளிக்கப்படும் ;

அல்லது

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், விவசாயம் ஆகிய நான்கு (04) பாடங்களிலும் கட்டாயமாக திறமை சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் 03 திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஒன்று (01) அல்லது இரண்டு (02) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (க. பொ. த. (உ. த.) கணிதப் பிரிவில் கற்ற மாணவர்கள், இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருத்தல், இக்கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகுதியாகக் கருதப்படமாட்டாது). இத்தகைமைகளை பெற்றிருப்பவர்கள் 3.1 (அ) பந்திக்கு ஏற்ப விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுள் தகைமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மேலும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

அல்லது

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய நான்கு (04) பாடங்களிலும் திறமை சித்தி அடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். இதில் ஒரே அமர்வில் மூன்று திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி (தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய பாடங்களிலிருந்து விவசாயப் பாடம் அடங்கலாக மூன்று அல்லது நான்கு பாடங்களுக்குத் தோற்றி) விவசாயப் பாடம் அடங்கலாக குறைந்தது ஒன்று (01) அல்லது இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் இத்தகைமைகளை பெற்றிருப்பவர்கள் 3.1 (அ) பந்திக்கு ஏற்ப விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுள் தகைமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மேலும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

(ஈ) ஆங்கில மொழியில் கற்கை நெறியை பயில விரும்பினால், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.2 வயது.- 2009.06.30 அன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறையாமலும், 25 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

3.3 மேலே 3.1, 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கான தகைமைகளைக் கவனமாக வாசிக்கும்படி விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர். தேவையான கல்வித் தகைமைகள் இல்லாத அல்லது குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் இல்லாத அல்லது இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*3.4 பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருப்பவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர். தற்போது அரச திணைக்களமொன்று அல்லது நிறுவனமொன்றுடன் இணைந்த விவசாயக் கல்லூரியொன்றில் இரு வருட விவசாயப் பயிற்சி நெறியொன்றை பயிலும் மாணவர்கள் இப்பயிற்சி நெறியை பின்பற்ற தகுதியற்றவர்கள் ஆவர்.*

*3.5 இலங்கை விவசாயக் கல்லூரிகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலேயே கற்பிக்கப்படுவதனால், விண்ணப்பதாரிகள் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் இக்கற்கை நெறியைப் பின்பற்றுவதற்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் இயலுமானவர்களாக இருத்தல் வேண்டும். தெரிவு செய்த மொழியில் தொடர்ச்சியாகப் பயில்வதோடு, இடைநடுவில் பயிலும் மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

*3.6 ஆங்கில மொழியில் பயிற்சி நெறிகள் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் மாத்திரமே வழங்கப்படும். ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தாம் விரும்பும் மொழியில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றலாம். அத்துடன் ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் I, II ஆம் வினாப்பத்திரங்களுக்கு மேலதிகமாக III ஆம் வினாப்பத்திரத்திற்கும் தோற்றுதல் வேண்டும். குறிப்பிட்ட மொழியில் பயிற்சி நெறியைப் பயில தெரிவு செய்யப்பட்டோர், பின்னர் வேறு மொழியில் பயில்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மாணவர் பயிற்சிக் காலத்தின் போது தாம் ஆரம்பத்தில் தெரிவு செய்த மொழி மூலத்திலேயே பரீட்சைகள் உட்பட அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆங்கில மொழி மூலத்தில் கற்கை நெறியை பயில்வதற்கு 30 மாணவ, மாணவிகளே தெரிவுசெய்யப்படுவர்.*

**4. விண்ணப்பங்கள் :**

*4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப, விண்ணப்பங்கள், விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தினால் அல்லது தட்டச்சு செய்யப்பட்டு 8" x 12" (A4 அளவு) அளவுள்ள தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தினை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். 01 முதல் 10 வரையான விபரங்கள் முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். 11-14 வரை இரண்டாவது பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் வேண்டும். தாம் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமைந்துள்ளதா என விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.*

*4.2 பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 என்னும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைத்து இலங்கையின் ஏதாவது மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 300 பெறுமதியான பற்றுச் சீட்டொன்றை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழன்று விடாதபடி ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை கைவசம் வைத்திருப்பது சிறந்ததாகும். பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தை முன்னிட்டும் திரும்ப வழங்கப்படமாட்டாது. இப்பரீட்சை கட்டணத்தை வேறு எப்பரீட்சைக்காகவும் மாற்ற முடியாது. இப்பரீட்சை கட்டணத்திற்கான பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.*

*4.3 30.06.2009 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பங்கள் யாவும் "பணிப்பாளர், விரிவாக்க, பயிற்சிப் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில், அனுப்பப்படல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் பிந்தும் அல்லது காணாமற் போகும் விண்ணப்பங்களிற்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.*

*4.4 விண்ணப்பத்தை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாயக் கல்லூரிகளுக்கான அனுமதி 2010-2012" என்னும் வாக்கியமும், தெரிவு செய்த முதலாவது, இரண்டாவது பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள நகரங்களின் பெயர்களும் தெளிவாக எழுதப்பட்டு இருத்தல் வேண்டும். விண்ணப்பித்த பரீட்சை நிலையங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.*

**5. தெரிவு செய்யப்படும் முறை :**

*5.1 சேர்த்துக்கொள்ளப்படும் வருடத்தில் ஒவ்வொரு மொழி மூலத்திலும் விவசாயக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையைப் பெற்று விண்ணப்பதாரிகளைக் கொண்டுள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு மொழி மூலத்திலும் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு மொழி மூலத்திலும் அம் மாவட்டத்திற்கான விண்ணப்பதாரிகளிலிருந்து போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். அவ்வாறான தெரிவின்போது கீழ்க்காணும் விடயங்களும் கருத்தில் எடுக்கப்படும்.*

*க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டமே அவ்விண்ணப்பதாரியின் மாவட்டமாக கொள்ளப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டத்தின் இலக்கத்தை அறிவதற்கு இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் இணைப்பு இல. 01 ஐ பார்க்கவும்.*

5.2 எழுத்துப் பரீட்சைக்கான விடயங்கள், நேர சூசி என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| | விடயங்கள் | கால அளவு | நேர சூசி |
|---|---|---|---|
| I. | (வினாத்தாள் I<br>விவசாயம் (100 புள்ளிகள்)<br>க. பொ. த. (சா. த.) விவசாய பாடப்பரப்பிற்கு அமைய தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்களடங்கியது). | 1 மணித்தியாலம் | 09.30 மணி - 10.30 மணி |
| II. | வினாத்தாள் II<br>விவேகப் பரீட்சை (100 புள்ளிகள்) | 1 மணித்தியாலம் | 11.00 மணி - 12.00 மணி |
| III. | வினாத்தாள் III<br>ஆங்கில மொழி (புள்ளிகள் 100)<br>க. பொ. த. (சாதாரண தரப்) பாடப்பரப்புக்கமைய வினாத்தாள் தயாரிக்கப்படும் ஆங்கில மொழியில் விண்ணப்பதாரி ஒரு விடயத்தை விளங்கிக்கொள்ளல், ஆங்கில மொழி மூலம் தொடர்பாடலுக்கான திறமையையும் ஓரளவு ஆங்கில இலக்கண அறிவையும் பரீட்சிப்பதற்கான பரீட்சையாக இருக்கும். (இவ்வினாத்தாள் ஆங்கில மொழி மூலத்தில் கற்கை நெறியை பயில விரும்பும் மாணவர்களுக்கு மாத்திரமாகும்). | 1 மணித்தியாலம் | 13.30 மணி - 14.30 மணி |

5.3 விவசாயம், விவேகப் பரீட்சை ஆகிய இரு வினாத்தாள்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். க. பொ. த. (உ. த.) உயிரியல் பிரிவில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்று போட்டிப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிவு செய்யப்படுவர். குறித்த மாவட்டமொன்றில் குறித்த மொழி மூலத்திற்கு அவ்வாறு சித்தியடைந்தவர்கள் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறான விண்ணப்பதாரிகள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் அம்மாவட்டத்திலிருந்து அம்மொழி மூலத்திற்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளின் தொகைக்கு பொருந்தும் வகையில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரு பாடத்தில் அல்லது இரு பாடங்களில் சித்தியடைந்த மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகளில் போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர். இத்தெரிவு கட்டாயமாக 5.1 இல் குறிப்பிட்டபடி மாவட்ட அடிப்படையில் போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் மேற்கொள்ளப்படும் குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர் தொகை, அக்கல்லூரிகளில் ஆண்/பெண் விடுதி வசதிக்கேற்பவும் பயிற்சி வசதிகளுக்கேற்பவும் தீர்மானிக்கப்படும். எனவே மாணவர் தெரிவின்போது போட்டிப் பரீட்சையின் இரண்டு பாடங்களிலும் பெற்ற கூட்டுப் புள்ளிகளின் வெட்டுப்புள்ளி மட்டம் குறித்த மாவட்டத்தில் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே பாடநெறியை பயிலும் மொழி மூலத்திற்கேற்ப வேறுபடும். ஏதாவதொரு மாவட்டமொன்றில் போதியளவு தகுதியுடைய மாணவர் தொகை காணப்படாதவிடத்து குறித்த மொழி மூலத்தில் கல்லூரிகளின் அனுமதியை பூரணப்படுத்துவதற்காக சம எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் ஏனைய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர். இதற்கேற்ப மாவட்டத்தில் போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற குறித்த அளவான விண்ணப்பதாரிகள் அவர்களின் கல்விச் சான்றிதழ்களையும் ஏனைய சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தங்களது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. விவசாயக் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கையை விட அதிகளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

5.4 சிங்களம் அல்லது தமிழ் மொழியில் கற்கை நெறியைப் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள், கட்டாயமாக, தாம் கற்கை நெறியை தொடருவதற்குத் தெரிவு செய்த மொழி மூலமே முதலாம் இரண்டாம் வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். ஆங்கில மொழியில் கற்கை நெறியை பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விருப்புக்கேற்ப சிங்களம் அல்லது தமிழ் மொழியில் I ஆம், II ஆம் வினாத்தாள்களிற்குத் தோற்ற முடியும். இதற்கேற்ப சகல விண்ணப்பதாரிகளும் எழுத்து மூலப் பரீட்சையின் முதலாம், இரண்டாம் வினாப்பத்திரங்களுக்கு சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் தோற்ற முடியும். ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆங்கில மொழி பரீட்சைக்குத் தோற்றி குறைந்தது 40% புள்ளிகளையாவது பெறல் வேண்டும். ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் இச்சித்தி பெறுவதற்கான குறைந்தபட்சப் புள்ளி வீதத்தின் அளவு மாற்றியமைக்கப்படலாம். ஆங்கில மொழியில் பயில்வதற்கு திறமை அடிப்படையிலும், அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையிலும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் அனைவரும் வினாத்தாள் I, II, III ஆகிய மூன்றிலும் ஆகக் குறைந்த தகுதியைப் பெறல் வேண்டும். ஆங்கில பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத விண்ணப்பதாரிகள் அவர்கள் போட்டிப் பரீட்சையில் 1 ஆம் 2 ஆம் வினாத்தாள்களிற்கு உயர் புள்ளிகள் பெற்று சித்தியடைந்திருப்பின், திறமைக்கேற்ப தமது மாவட்ட அடிப்படையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் பயில்வதற்கு சேர்த்துக்கொள்வது தொடர்பில் கவனமெடுக்கப்படும். விண்ணப்பதாரி போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழிமூலம் எக்காரணம் கொண்டும் பின்பு மாற்ற முடியாது.

5.5 3.1, 3.2 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் பிரவேசப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது

கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய பிரவேசப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பிரவேசப்பத்திரம் பரீட்சைத் திணைக்களத்தினால் அஞ்சல் செய்தவுடன் பத்திரிகைகளில் பரீட்சைக்கான விளம்பரம் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தின் பின்பு 2 அல்லது 3 நாட்களில் பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவும். பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெறாதவர்கள் தம்மிடம் இருக்கும் விண்ணப்பப்பத்திரத்தின் நிழற் பிரதி, உறுதி செய்யப்பட்ட பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும். கொழும்பிற்கு வெளியில் வசிக்கும் பரீட்சார்த்திகள் தமக்குரிய பக்ஸ் இலக்கத்தையும் தம்மிடம் வைத்திருத்தல் மிகவும் பொருத்தமானதாகும். பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெற்றவர்கள் யாவரும் பரீட்சைக்குத் தகுதியானவர்கள் எனக் கருதப்பட மாட்டாது.

5.6 பரீட்சையின்போது மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டுப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்படும் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்) ; இது பரீட்சைத் திகதிக்கு முன்னுள்ள மூன்று வருட காலத்தினுள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5.7 இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைகளின் விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்குவிதி முறைகளை மீறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார். பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரத்தினை அவர்களுக்கு அனுப்பி வைக்கும். மாவட்ட அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சார்த்தியொருவர் எழுத்துப் பரீட்சைக்கு/நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பினும் அத்தகைய அனுமதி காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இப்பிரமாணத்தின்படி இப்பரீட்சைக்குத் தகைமையற்றவர் எனக் கண்டால் அவர்/அவள் தகைமையற்றவர் ஆவார்.

5.8 எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவிதப் படிகளும் செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

6. **"குசுமா லக்ஸ்மி கருணாதிலக்க" ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்** :

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் வினாத்தாள் I, II என்பனவற்றில் அதிகூடிய புள்ளியைப் பெறும் எந்த மொழியிலேனும் பயிற்சியை மேற்கொள்ளும் பெண் விண்ணப்பதாரி ஒருவருக்கு மேற்படி புலமைப் பரிசில் அதன் விதிகளுக்கு அமைய 2 வருட காலத்திற்கு வழங்கப்படும். புலமைப் பரிசிலைப் பெற்றவருக்கு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில சந்தர்ப்பம் வழங்கப்படும். இப்புலமைப் பரிசின் வருடாந்தப் பெறுமதி ரூபா 10,000 ஆகும்.

(கலாநிதி) சீ. குடாகமகே,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2009.04.22.

இணைப்பு இல. - 01

**மாவட்டத்தின் பெயர்களும் அவற்றின் இலக்கமும்**

(5.1 பந்திக்கு ஏற்புடையதாகும்)

| மாவட்ட இல. | மாவட்டம் | மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 14 | கம்பஹா |
| 02 | பதுளை | 15 | களுத்துறை |
| 03 | மட்டக்களப்பு | 16 | மாத்தளை |
| 04 | கொழும்பு | 17 | நுவரெலியா |
| 05 | காலி | 18 | மன்னார் |
| 06 | யாழ்ப்பாணம் | 19 | முல்லைத்தீவு |
| 07 | கண்டி | 20 | அம்பாறை |
| 08 | குருநாகல் | 21 | புத்தளம் |
| 09 | மாத்தறை | 22 | பொலன்னறுவை |
| 10 | திருகோணமலை | 23 | மொனராகலை |
| 11 | வவுனியா | 24 | கேகாலை |
| 12 | இரத்தினபுரி | 25 | கிளிநொச்சி |
| 13 | அம்பாந்தோட்டை | | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களம்**

இலங்கை விவசாயக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவதற்கான போட்டிப்பரீட்சை - 2009

விவசாய டிப்ளோமா பாடநெறி - 2010/2012

**(Competitive Examination for Admission to Sri Lanka School of Agriculture – 2009**
**Diploma in Agriculture - (2010/ 2012)**

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்றும் நிலையம் அமைந்துள்ள நகரம் :
1 ஆம் தெரிவு ................................
2 ஆம் தெரிவு ................................

அப்பரீட்சை நிலைய இலக்கம்
..........................
..........................

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்திக்கு அமைய)

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

........................

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3. பாடநெறியை பயிலுவதற்கு விரும்பும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

...................

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. பால்

| | |
|---|---|
| ஆண் | 0 |
| பெண் | 1 |

[ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5. க.பொ.த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் :
......................

மாவட்ட இலக்கம் :
...........

(5.1 பந்திக்கு ஏற்ப இணைப்பு 1 ஐ பார்க்க)

6. க.பொ.த. (உ.த.) உயிரியற் பிரிவில் தோற்றி சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
03 பாடங்கள் ஓர் அமர்வில் - 3
02 அல்லது 01 பாடம் ஓர் அமர்வில் - 2

சித்தியடைந்த பாடங்களுக்கேற்ப உரிய இலக்கம்
............................

(3.1 பந்திக்கு ஏற்ப)

7. (அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) :-----.
(தெளிவான எழுத்தில்)

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் Capital எழுத்தில்) : ----.
(உதாரணம் : ANANDA, K. C. B.)

(ஆ) (i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :-----.

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில Capital எழுத்தில்) : ----.

8. (i) முழுமையான முகவரி :-----.
(ii) பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :----.
(ஆங்கில Capital எழுத்தில்) :-
(iii) தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் இருப்பின் :----.

9. (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலையும் முகவரியும் (தமிழில்) :----.

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (தமிழில்) :----.

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (ஆங்கிலத்தில்) :----.

10. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

11. (அ) தற்போது வதியும் தேர்தற்தொகுதி (தமிழில்) :-----.

(ஆ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (ஆங்கிலத்தில்) :-----.

12. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

13. 2009.06.30 ஆந் திகதி அன்று வயது : வருடங்கள் | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

14. (அ) இந்த அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கு ஏற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விண்ணப்பதாரி சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ்மொழி<br>2. கணிதம்<br>3. விஞ்ஞானம்<br>4. விவசாயம்<br>5. சமூகக்கல்வி<br>6.<br>7.<br>8.<br>9.<br>10. | | |

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 பந்திக்கு அமைய கட்டாயம் திறமைச்சித்தி பெறவேண்டிய நான்கு பாடங்கள் தொடர்பான விபரங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ்மொழி<br>2. கணிதம்<br>3. விஞ்ஞானம்<br>4. விவசாயம்<br>5. சமூகக்கல்வி | | |

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியற் பிரிவில் தோற்றினீரா? ஆம்/இல்லை (தேவையற்ற சொல்லை கீறிவிடவும்)

(ஈ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல்<br>2. விவசாயம்<br>3. பௌதீகவியல்<br>4. இரசாயனவியல்<br>5. விலங்கியல்<br>6. தாவரவியல் | | |

(உ) மேலேயுள்ள தகைமைகளை உறுதிப்படுத்த சான்றிதழின் நிழற் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை)

சான்றிதழ்களின் நிழற் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? :-----.

15. (i) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (தமிழில்) :-----.
(ii) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :-----.
(ஆங்கிலத்தில் Capital எழுத்தில்)

16. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள் :

16.1 பற்றுச்சீட்டு இலக்கமும், திகதியும் :-----.
16.2 பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் இங்கு பசையால் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை கட்டாயமாக தம் வசம் வைத்துக்கொள்ளவும். |

**பரீட்சார்த்தியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகவும் தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் விவசாயம் அல்லது சமூகக்கல்வி இரண்டில் ஒன்றிற்கு திறமைச் சித்தியும் உயர்தரத்தில் உயிரியற் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் என உறுதியளிக்கிறேன். இதிலடங்கிய விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் தகைமை இழப்பேன் என்பதையும் அறிவேன். பரீட்சை தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கிறேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரால், பாடசாலை அதிபர் ஒருவரால், சமாதான நீதவானால், சட்டத்தரணியால் அல்லது வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக ரூபா 2,30,060 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

மேலே கையொப்பம் இட்ட திரு./திருமதி/செல்வி .............................................. என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) தகைமைகளை பெற்றுள்ளார் என கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை பரீட்சித்து அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி :----.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

5-215

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.